1975 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த அடிப்படையில் நீங்கள் பேசுகிறீர்கள்? பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்பு கொடுத்துவிட்ட பிறகு முடிவு அறிவித்தவிட்ட பிறகு எந்த அடிப்படையில் அதையொட்டி இந்த அவையில் பிரச்சினையை எழுப்புகிறீர்கள்? அந்தக் கருத்துக்களை எந்த விதியின் கீழ் சொல்வது?

திரு. பெ. சீனிவாசன்: நான் சொல்வதைக் கேளுங்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்வதைக் கேட்கத்தான் இருக்கிறேன். நீங்களும் இந்த அவையை நடத்தியவர். எந்த விதியின்கீழ் பேசுகிறீர்கள்?

திரு. பெ. சீனிவாசன்: உலகத்தில் இருக்கும் எல்லாமே விதிகளின் கீழ் வந்துவிடாது. திரு. தங்கமணி அவர்களுடைய தீர்மானத்தை எடுத்துக் கொள்வது பற்றி ஒரு பதில் சொன்னீர்கள். என்னுடைய தீர்மானத்தை எப்படி ரிஜெக்ட் செய்தீர்கள்?

(திரு. எம். முத்தையா எழுந்து நின்று கொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முத்தையா, உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. எம். முத்தையா: விதிமுறையைப் பின்பற்றுவதாகச் சொல்லுகிறீர்கள். தற்சமயம் கேள்வி நேரத்தில் நான் கை தூக்கினேன். விதி விதி என்று தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் கையைத் தூக்கிக் கொண்டே இருந்தேனே, என்னை ஏன் கூப்பிடவில்லை? தலைவர் அவர்களுக்கு இந்த பாரபட்சம் இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முத்தையா கை தூக்கியதை நான் பார்க்கவில்லை. தெரிந்திருந்தால் நிச்சயமாகக் கூப்பிட்டிருப்பேன். என்னுடைய கண்ணில் படவில்லை.

(4) நடைமுறைக் கேள்விகள்.

(அ) சட்ட மன்ற நுழைவாயிலில் ஓர் உறுப்பினர் காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய சட்ட மன்றத்திற்குள்ளே நுழைய பல வாயில்கள் இருக்கின்றன. தென்புரம், வடபுரம் உள்ள வாயில்களில் காவலர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். நேற்று நான் உள்ளே வரும்போது என்னைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அங்குள்ள பணியாளர்கள் நான் எம். எல். ஏ. என்று சொன்னவுடன் என்னை அனுமதித்தார்கள்.

சட்ட மன்றத்திற்குள்ளே காவலர்களை நியமித்திருப்பதைப் பார்க்கும்போது இது ஒரு புறக் காவல் நிலையம்போல் தோன்றுகிறது. இது நடைமுறைக்குச் சரியாக வராது. இனிமேலாவது பேரவைத் தலைவர் அவர்கள் சட்ட மன்றப் பணியாளர்களை நியமிக்கவும், காவலர்கள் சட்ட மன்ற எல்லைக்குள் இல்லாமல் இருக்கவும், ரகசிய போலீஸ் நடமாடாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்கிற ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னது கவனிக்கப்படும்.

(3) தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) சட்டப் பேரவை சார்ஜண்ட் அமைச்சரின் பாதுகாவலரால் பயமுறுத்தப்பட்டது பற்றி எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி: சென்ற சனிக்கிழமை குறிப்பிட்ட பிரச்சினையை எழுப்பியிருக்கிறேன். அசெம்பிளி சார்ஜெண்ட் ஒரு அமைச்சருடைய பாதுகாவலரால் பயமுறுத்தப்பட்டார் என்பது பற்றி எழுப்பிய நேரத்தில் அப்போது உதவி சபாநாயகர் அவர்கள் அது சம்பந்தமாக முடிவெடுத்து அறிவிப்பதாகச் சொன்னார்கள். அது என்றைக்கு அறிவிக்கப்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* *

திரு. கோவை செழியன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரா? இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. இது நிகழ்ச்சிக்குறிப்பில் வருது.

* *

*திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் சௌந்தரபாண்டியன் கூறியமாதிரி, நேற்றைய தினம் எனக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது. சட்ட மன்றத்தின் தெற்கு வாசலில் வரும்பொழுது அமைச்சர்களின் காவலர்கள் என்னை மறித்தார்கள். பக்கத்தில் இருப்பவர் இவர் ஒரு உறுப்பினர் என்று சொன்ன பிறகுதான் அனுமதித்தார்கள். என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.